மாலை முரசு

பக்கங்கள் 11

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 25 வியாழக்கிழமை 10.08.2023 அதிர்வு 10

## மட்டக்களப்பில் ஆணின் சடலம்

மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பார் வீதியிலுள்ள மதகு ஒன்றின் கீழிருந்து அடையாளம் காணப்படாத நிலையில் ஆண் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் 04



# குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை தடுத்து நிறுத்துங்கள்!

## ரணிலிடம் சரத் வீரசேகர கோரிக்கை

## நாடாளுமன்றில் அவர் ஆவேச உரை



முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில், இந்த நிகழ்வை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வலியுறுத்தினார்.

## ஈஸ்டர் வெடிகுண்டுத் தாக்குதல் வழக்கில் 7,721 குற்றச்சாட்டுகள்

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்களை நடத்த சதி செய்த குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நௌபர் மௌலவி உட்பட 24 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 04

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணி 21ஆம் திகதி தொடங்கும்



முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணி எதிர்வரும் 21ஆம் திகதி 04

## மூளாய் ஆஸ்பத்திரிக்கு இரண்டு அம்புலன்ஸ்கள்

### ஜப்பான் அன்பளிப்பாக வழங்கியது

ஜப்பான் மக்களின் நிதியனுசரணையுடன் ஜப்பானிய தூதரகத்தினால் இன்று 04



## கொரோனாத் தடுப்பூசி இல்லாததால் வெளிநாடு செல்வதில் பெரும் சிக்கல்



இலங்கையில் எந்தவொரு கொரோனாத் தடுப்பூசியும் இல்லாதமையால் கடுமையான நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது என்று இலங்கை பொதுச் சுகாதார

## வவுனியாவில் திடீரென் கடும் காற்றுடன் மழை!

### 3 வீடுகள் சேதம்: 10 பேர் பாதிப்பு



வவுனியாவில் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிப்படைந்துள்ளமையுடன், 3 வீடுகளும் சேதமடைந்துள்ளன என 04

## பத்து மாணவப் பிரதிநிதிகளுக்கு கோட்டைக்குள் நுழையத் தடை!

### நீதிமன்றம் இன்று விடுத்தது

கொழும்பு,ஓக.10

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் மதுசான் சந்ரஜித் உள்ளிட்ட 10 பேருக்கு கொழும்பு கோட்டை 04



OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS

KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

# அடிப்படை வீட்டு வசதிகள் கூட இன்றி

# நொச்சிக்குளம் தெலுங்கு கிராம மக்கள்





தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வீடமைப்பு அமைச்சராக இருந்த போது மக்களுக்கு வீடு கட்டித் தருவதாக வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் வவுனியா, நொச்சிக்குளம் தெலுங்கு கிராம மக்கள் தற்போது கடும் நெருக்கடியில் உள்ளனர்.

நொச்சிக்குளம் கிராமத்தில், கிராம மக்களுக்கு 22 வீடுகள் கட்டிக் கொடுக்க, வீடு ஒன்றுக்கு 7 இலட்சம் ரூபா வழங்குவதாக முன்னாள் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இதன்படி, முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாச தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக கிராம மக்களுக்கு ஒரு லட்சம் ரூபா தொடக்கம் 3 லட்சம் ரூபா வரையான தொகையை வழங்கியுள்ளார்.

எனினும் வவுனியா, நொச்சிக்குளம் தெலுங்கு கிராம மக்களுக்கு



குறித்த தொகை கிடைக்கவில்லை. அடிப்படை வாழ்வாதாரம் கூட இல்லாத இக்கிராம மக்கள மண் குடிசைகளில் வசித்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் நிலத்துக்கு உரிமைப் பத்திரம் கூட இல்லை என்று கூறுகின்றனர்.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் வழமை போன்று வீட்டுக் கனவுகளை காட்டி ஏமாற்றி விட்டதாக இக்கிராம மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

1985 ஆம் ஆண்டு நொச்சிக்குளம் தெலுங்கு கிராமத்தை விட்டு வெளியேறிய கிராம மக்கள் கடந்த 2012 ஆம் ஆண்டு நொச்சிக்குளம் கிராமத்துக்குத் திரும்பினர்.

வவுனியா, நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த பயனாளிகளில் ஒருவரான திருமதி தயானி இது பற்றித் தெரிவிக்கையில்–

“நாங்கள் இன்னும் தகரக் கூரையுடன் கூடிய குடிசைகளில் வாழ்கிறோம். நாங்கள் பல ஆண்டுகளாக பூரணப்படுத்தப்படாத வீடுகள் கட்டி வசிக்கிறோம். இந்த அரசிடமிருந்து எங்களுக்கு உதவி கிடைக்கும் என்று நம்புகிறோம். எங்களது பிரச்சினைகளை பார்க்க யாருமில்லை.

வீடுகளை நிர்மாணிப்பதற்கு நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம். ஒரு குழந்தைக்கு தனியாக பாடசாலைக்குச் செல்ல முடியாது. பாடசாலைக்குச் செல்லும் பாதையில் ஏறக்குறைய இரண்டு மைல் காடாக உள்ளது. எங்களைப் பற்றி யோசித்து எங்களுக்கும் உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவித்தார்.

வவுனியா நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த விஜய் என்னும் பயனாளி கருத்துத் தெரிவிக்கையில்–

வீடுகளை கட்டுவதற்கு 75 ஆயிரம் ரூபாவை வழங்குவதாக தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த சஜித் வாக்குறுதி அளித்திருந்தார். அதன்படி, ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது. அந்தப் பணத்தில் ஐந்து லோட் கற்கள் பறிக்கப்பட்டன. எங்களுக்கு மிகுதிப் பணம் கிடைக்கவில்லை. நாங்கள் இப்போது ஒரு குடிசையில் இருக்கிறோம். நான் ஊனமுற்றவன். ஒரு வேலையும் செய்ய முடியாது. யாரிடமாவது எதையாவது கேட்டு வாழ்கிறேன். இந்த வீட்டின் மிகுதியைக் கட்ட அரசு உதவ வேண்டும் என்றார்.

இது தொடர்பில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் பொறியியலாளர் கே.ஏ.ஜானக தெரிவிக்கும் போது–

வவுனியா நொச்சிக்குளம் தெலுங்கு கிராமத்தில் உள்ள மக்களின் வீட்டுப் பிரச்சினையை தீர்க்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை வழங்கியுள்ளார் என்றார்.

அதன்படி, இது தொடர்பான தகவல் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது என்று பொது முகாமையாளர் தெரிவித்தார். அந்தத் தகவல் கிடைத்ததும் அது தொடர்பான வீட்டுத் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பௌத்த மரபுரிமைகளுக்கு எதிராக செயற்படும் தமிழ் அரசியல்வாதிகள்

## சரத் வீரசேகர எம்.பி. குற்றச்சாட்டு



பௌத்த மரபுரிமைகளுக்கு எதிர் மறையாக தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் செயற்படும் போது 13 ஆவது திருத்தம் பற்றி பேச நாங்கள் விரும்பவில்லை. காணி அதிகாரம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டால் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகள் இல்லாதொழிக்கப்படும்.

மாகாண சபை முறைமை வெள்ளை யானை போன்றது. புதிய அரசியலமைப்புக்கே மக்களாணை உண்டு. ஆகவே மாகாண சபையை நீக்கி புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை (09) இடம்பெற்ற பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்த) சட்டமூலத்தின் மீதான விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்–

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக அதிகார பகிர்வு குறித்து ஜனாதிபதி விசேட உரையாற்றினார். நான் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளை பார்வையிட்டுள்ளேன்.

பௌத்த தொல்பொருள் மரபுரிமை வாய்ந்த வவுனியாவில் வெடுக்குநாறி பகுதியில் உள்ள பௌத்த மரபுரிமை சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

காணி அதிகாரம் வழங்காத போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மரபுரிமைகள் இவ்வாறு அழிக்கப்படும் போது காணி அதிகாரத்தை வழங்கினால் என்ன நேரிடும் என்பது கேள்விக்கிடமாகவுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான பௌத்த மரபுரிமை சின்னங்கள் காணப்படுகின்றன. அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதுவே எங்கள் உரிமை இவை சிங்களவர்களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் சொந்தமானது.

பௌத்த மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கு எதிர்மறையாக செயற்படும் அடிப்படைவாத தமிழ் அரசியல்வாதிகள் இருக்கும்வரை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் பற்றிப் பேசுவதற்கு நாங்கள் விரும்பவில்லை.

நாடு பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ள போது தமிழ் தேசிய கூட்டமைப்பினரே அதிகார பகிர்வை கோருகிறார்கள்.

விடுதலை புலிகளின் ஆயுதமாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்படுகிறது. 30 வருடகால யுத்தத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளமுடியாததைத்தற்போது தட்டில் வைத்து வழங்க முயற்சிப்பது முறையற்றது.

நாட்டின்ஒருமைப்பாட்டைப்பாதுகாக்க 29 ஆயிரம் பேர் உயிர் நீத்தார்கள், 14 ஆயிரத்துக்கும் அதிகமான படை வீரர்கள் தமது உடல் அங்கங்களை அர்ப்பணித்தார்கள்.

மாகாண சபைகள் செயற்பட்ட போது 10 கல்வி அமைச்சர்கள், 10 விவசாய அமைச்சர்கள் என பல அமைச்சர்கள் இருந்தார்கள். நாட்டில் தற்போது கல்வி, சுகாதாரம், விவசாயம் உள்ளிட்ட சேவைகள் முன்னேற்றமடைந்துள்ளனவா என்றால் இல்லை. மாகாண சபை முறைமை வெள்ளை யானை போலவே உள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கே மக்களாணை உள்ளது. ஆகவே மாகாண சபை முறைமையை நீக்கி புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.– என்றார்.

# மொழி திறன் மேம்படுத்துதலுக்குச் சான்றிதழ்




(நூருல் ஹுதா உமர்)

கல்வி அமைச்சினால் செறிவூட்டல் கற்றல், கற்பித்தல் மற்றும் மதிப்பீடு மற்றும் ஆங்கில மொழி திறன்களை மேம்படுத்துதல் அபிவிருத்தி திட்டத்தை வெற்றிகரமாக முடித்தமைக்காக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை மற்றும் கலாச்சார பீடத்துக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

கல்வி அமைச்சால் நேற்று புதன் கிழமை (09) பண்டாரநாயக்க ஞாபகார்த்த வரவேற்பு மண்டபத்தில் நடத்தப்பட்ட பரிசளிப்பு நிகழ்வில் வைத்து இது வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சான்றிதழை இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் மற்றும் கலை,கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் உட்பட கல்விசார் உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்டனர்.

# அட்டாளைச் சேனையில் கஞ்சாவுடன் ஒருவர் கைது



அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் 29.2 மில்லிகிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் .

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபரை 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று விஷேடஅதிரடிப்படையினருக்குகிடைத்த தகவலைத் தொடர்ந்து சந்தேக நபர் கைது செய்யயயப்பட்டார்.

மேலதிக விசாரனைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## குறுந்தூர் மலையில் ...

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு துவேசத்துடன் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

“பொருளாதார வீழ்ச்சிக்கு நாம் முகம் கொடுத்துள்ள நிலையில், இதனைப் பயன்படுத்தி தமிழ் அரசியல்வாதிகள் பிரிவினைக்கு முற்படுகிறார்கள். குருந்தூர்மலை என்பது வடக்கிலுள்ள பௌத்த மத்தியஸ்தலமாகும்.

இதனை புராதனச் சின்னமாக அடையாளப்படுத்த நடவடிக்கை எடுத்த போது, தமிழ் அடிப்படைவாதிகள் இதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார்கள். முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி அதற்கிணங்க, இந்த செய்றபாடுகளை இடைநிறுத்தியுள்ளார்.

இந்தநிலையில், சில குண்டர்கள் அங்கு நுழைந்து புராதனச் சின்னத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்பட்டுள்ளார்கள். அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் பல கோயில்கள் உள்ளன. பௌத்தர்களும் அங்கு சென்று வழிபடுகிறார்கள். எனினும், எந்தவொரு கோயிலுக்கும் சென்று புத்தர் சிலையை வைத்து, பிரித் ஓதி பௌத்தர்கள் வழிபடுவதில்லை. ஆனால், முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

இந்து அடிப்படைவாதிகளுக்கு நீதிபதி இவ்வாறு தொடர்ந்தும் அனுமதி வழங்கிக் கொண்டிருக்கிறார். விகாராதிபதியையும் நீதிமன்றுக்கு அழைக்காமல்தான் இவ்வாறான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இது பௌத்தர்களின் மனங்களைப் புண்படுத்தும் செயற்பாடாகும்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் நாங்கதானா இனவாத- மதவாத பிரச்சினைகளுக்கு காரணம்? அல்லது பௌத்த வழிபாட்டுஸ்தலம் ஒன்றில் பொங்கல் நிகழ்வை நடத்த அனுமதி வழங்கிய சட்டத்தரணி உள்ளிட்ட நீதிபதியா காரணம் எனக் கேட்க விரும்புகிறேன்.

இந்த செயற்பாடு தொடர்பாக அவதானம் செலுத்தி, உடனடியாக இந்தநிகழ்வை நிறுத்த வேண்டும் என்று ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகளிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

வடக்கில், பௌத்த சின்னங்களை அழிக்கும் பல செய்றபாடுகள் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றன. காணி அதிகாரம் இல்லாமலேயே இவ்வாறு இடம்பெறுகிறது என்றால், காணி அதிகாரம் கிடைத்துவிட்டால் எப்படி இருக்கும்? இந்த பௌத்தச் சின்னங்கள் பௌத்தர்களுக்கு மட்டுமன்றி, நாட்டிலுள்ள அனைவருக்கும் உரித்தானவை என்று நினைக்காத அடிப்படைவாத அரசியல்வாதிகள் இருக்கும்வரை, 13 தொடர்பாக நாம் கதைக்கக்கூட தயாரில்லை” என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டக்களப்பில் ...

தெரிவித்துள்ளனர்.

பார் வீதி, உப்போடை சந்தியை அண்மித்த பகுதியிலுள்ள மதகின் கீழ் சடலம் ஒன்று இருப்பதை இன்று காலை கண்ட பொதுமக்கள் பொலிஸாருக்குத் தெரிவித்தமையையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அந்தச் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொரோணா ...

பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார். இதனால் வெளிநாடுகளுக்குச் செல்ல எதிர்பார்த்துக் காத்திருக்கும் இளைஞர்கள் தங்கள் பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“வெளிநாடு செல்ல எதிர்பார்ப்பவர்கள் கொவிட் தடுப்பூசி செலுத்திக்கொண்டதற்கான இலத்திரனியல் சான்றிதழ்களைப் பெற வருகின்றார்கள். அவர்களில் அதிகமானோர் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்களேயாவர்.

மேற்கத்திய நாடுகள் பல இன்னமும் தடுப்பூசி செலுத்திய சான்றிதழ்களைக் கேட்பதனால் வெளிநாடு செல்வதில் கடுமையான சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசு அவதானம் செலுத்த வேண்டும். தற்போது மேற்கத்திய நாடுகளில் கொரோனாவின் புதிய மாறுபாடுகள் அச்சுறுத்த ஆரம்பித்துள்ளன.

இலங்கையில் தடுப்பூசி இல்லாத ஒரு நிலையில் இந்த மாறுபாடுகள் நாட்டுக்குள் நுழைவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன.” – என்றார்.

## பத்து மாணவ ...

பகுதியின் பல இடங்களுக்குள் உட்பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே இன்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கொழும்பு கோட்டை பஸ் நிலையத்திற்கு முன்பாக அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்தினால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் எனப் பொலிஸாரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு, காலிமுகத்திடல், மற்றும் அலரி மாளிகை உள்ளிட்ட , இடங்களுக்குள் உட்பிரவேசிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அமைதியான முறையில் போராட்டங்களை நடத்த முடியும் என கோட்டை நீதவான் திலின கமகே தெரிவித்தார். நீதிமன்ற உத்தரவை மீறும் போராட்டக்காரர்களை கைது செய்வதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளதாகவும் நீதவான் குறிப்பிட்டுள்ளார்.

## கொக்குத் தொடுவாய் ...

மேற்கொள்ளப்படும் என உத்தேச மாதத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான

வழக்கு விசாரணை கடந்த 08.08.23 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் எடுத்து கொள்ளப்பட்டு அதில் வழங்கப்பட்ட உத்தரவிற்கமைய இன்றைய தினம் தொல்பொருள் திணைக்களத்தினர், சட்ட வைத்திய அதிகாரி அடங்கிய குழுவினர் முல்லைத்தீவு நீதிபதி ரி.பிரதீபன் தலைமையில் இன்று சம்பவ இடத்திற்கு கள விஜயம் செய்தனர்.

கள விஜயத்தின் பின்னர் இது தொடர்பாக சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் ஊடகங்களுக்கு மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

“இன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் மனித புதைகுழி வழக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதை போன்று சந்தேகத்திற்கிடமான பிரதேசத்தை பார்வையிடுவதற்கு அழைக்கப்பட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் வருகை தந்தார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்தியர் வாசுதேவாவும், வேறு நிறுவனப் பிரதிநிதிகளும் பிரசன்னமாகியிருந்தார்கள்.

தொல்பொருள் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு இதற்கான பாதீடும், திட்டமும் ஒரு கிழமைக்குள் நீதிமன்றுக்கு தாக்கல் செய்யப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஆகவே அவர்கள் இந்த மாதம் 17ஆம் திகதி அதற்கான திட்டங்களை தாக்கல் செய்ய இருக்கின்றார்கள்.

அதனைத் தொடர்ந்து 21ஆம் திகதி இந்த அகழ்வு பணி நடைபெற தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அது இந்த மாதம் 17ஆம் திகதி நீதிமன்றில் உறுதிப்படுத்தப்படும்” என்றார்.

## வவுனியாவில் ...

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் நேற்று மாலை திடீரென கடும் காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதன் காரணமாக பாவற்குளம் படிவம் 6 பகுதியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 அங்கத்தவர்களும், பிரமணாலங்குளம் பகுதியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 அங்கத்தவர்களும், முதலியார் குளம் பகுதியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 அங்கத்தவர்களும் என 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

இந்த மூன்று குடும்பங்களும் வசித்து வந்த 3 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

## மூளாய் ஆஸ்பத்திரிக்கு ...

காலை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு இரண்டு அம்புலன்ஸ்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் எச்.இ.மிசுகொசி மற்றும் அவரது தூதரக அதிகாரிகள் இணைந்து இதனை வழங்கி வைத்தனர். மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையினரால் யாழ் இசைக்கருவி நினைவு சின்னமாக வழங்கப்பட்டு தூதுவர் கௌரவிக்கப்பட்டார்.

மூளாய் வைத்தியசலையின் அனைத்து வசதி வாய்ப்புக்கள் குறித்தும் தூதுவர் ஆராய்ந்த நிலையில் தனது வருகையின் ஞாபகார்த்தமாக மரமொன்றையும் வைத்தியசாலை வளாகத்தில் நாட்டி வைத்தார்.

## ஈஸ்டர் ...

வழக்கின் குற்றச்சாட்டுகள் நேற்று மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் வாசிக்கப்பட்டது.

இவர்களுக்கு எதிராக 7,721 குற்றச்சாட்டுகள் வாசிக்கப்பட்டன. அவற்றில் ஒரு குற்றச்சாட்டை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டனர்.

மேல் நீதிமன்ற நீதிபதிகளான தமித் தொட்டவத்த, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேலதிக குற்றச்சாட்டுகளை வாசிப்பதற்காக சந்தேக நபர்கள் அனைவரையும் இன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதிகள் நேற்று உத்தரவிட்டனர்.



கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பாதை இல்லாப் பயணம்

அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியும் அல்ல, அது தீர்வுமல்ல. (தமிழர்) தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டியே இனப்பிரச்சினையைத் தீர்க்க ஒரே வழியாகும்.

- இப்படி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி திரும்பவும் அறிவித்திருக்கின்றது.

13ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் தொடர்பில் கட்சிகளின் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியிருக்கின்றமையின் பின்னணியில், தாம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே முன்னணியின் தலைவர் கஜேந்திர-குமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகிய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாறு தெரிவித்திருக்கின்றனர்.

அவர்களைப் பொறுத்தவரை அவர்களின் பார்வையும் இலக்கும் மிகத் தெளிவானவை. தமிழர் தேசத்தை அங்கீகரித்து, பாதுகாக்கும் சமஷ்டி முறைமை மட்டுமே தீர்வு. அதற்குத்தான் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றிருகின்றார்கள். ஆகவே, அது தவிர வேறு எது குறித்தும் அவர்கள் பேசக்கூடாது, இலக்கு வைத்து நகரக் கூடாது என்று ஒற்றைக் காலில் எப்போதும் அவர்கள் பிடிவாதமாக நிற்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல, சமஷ்டித் தீர்வுக்கு உட்படாத - ஒற்றை ஆட்சிக்குள் அமைகின்ற - 13 வது திருத்தம் போன்ற ஏற்பாடுகள் குறித்து ஆளும் தரப்புடன் பேச - கலந்துரையாட - செல்வதே மாபெரும் வரலாற்றுக் குற்றம், இனத்துரோகம் என்பது அவர்களின் நிலைப்பாடு. கருத்தியல் நோக்கில் அது சரியும் கூட.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இந்தக் கொள்கை நிலைப்பாட்டை சில தரப்புக்கள் தெளிவான அரசியல் தரிசனம் அல்லது சித்தாந்தப் பாதை என்று மெச்சுகின்றன. அது அப்படியே இருந்து விட்டுப் போகட்டும்.

ஆனால், அந்தத் தெளிவான அரசியல் தரிசனத்தின் பிரகாரம் தமிழர் தேசம் தனது இலக்கை எட்டுவதற்கு உருப்படியான - சாத்தியபூர்வமான - பயனுள்ள - ஆக்கபூர்வமான - செயற்றிட்டம் ஏதும் மக்கள் முன்னணியிடம் உள்ளதா என்று தேடிப் பார்த்தால் பதில் ஐயுறவே.

வெறும் வறட்டு தத்துவம் - கொள்கை விளக்கம் - லட்சியச் சித்தாந்தம் - நல்ல பெறுபேறுகளைத் தராது. இலக்கை எட்ட வழிகாட்டாது.

தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் அடக்குமுறை மேலாண்மையின் ஆபத்துக்களையும், புறநிலையான கட்டாயங்களையும், புரிந்து கொண்டு , அவற்றை எதிர்கொண்டபடி, உள்ளவற்றையாவது தக்கவைத்தவாறு, இலக்கை நோக்கி முன்னேறும் புரட்சிகரமான திட்டம் - அதுவும் காரிய சாத்தியமான, உருப்படியான, தாக்குப் பிடிக்கக் கூடிய நடைமுறை திட்டம் மிக மிக முக்கியமானது.

அது இல்லாமல், வெறும் வறட்டுச் சித்தாந்தத்தைப் பேசிக் கொண்டிருப்பது, ஏட்டு சுரைக்காயே தவிர, அது பசிக்கு உதவப் போவதில்லை.

அத்தகைய வறட்டுச் சித்தாந்தம் இறுதியில் விபரீத விளைவுகளையும் கூட ஏற்படுத்தி விடும். கொள்கை இலட்சியத்துக்கு முன்னர் தந்திரோபாயப் பாதை முக்கியம். சாத்தியமான அந்தப் பாதையை அடையாளப்படுத்தி, வெளிப்படுத்திக் கொண்டு, அந்தப் பாதையில் கொள்கை இலட்சியத்தை நோக்கிப் பயணிப்பதே பொருத்தமானது.

# சேவையாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவில்லை

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மீது குற்றஞ்சாட்டுகிறார் அமைச்சர் கஞ்சன விஜேசேகர

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2023 ஆம் ஆண்டுக்காக சேவையாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கவில்லை. நிறைவடைந்த ஏழு மாத காலப் பகுதியில் மாத்திரம் கூட்டுத்தாபனம் 69 ஆயிரம் மில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளது என்று மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை (09) வாய்மூல விடைக்கான வினாக்களின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் டீதரிவித்துள்ளவை வருமாறு–

2015 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பெற்றோலிய கூட்டுத்தாபனம் நிதியியல் ரீதியில் இலாபம் மற்றும் நஷ்டமடைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டு 20 ஆயிரத்து 520 மில்லியன் ரூபா நஷ்டத்தையும், 2016 ஆம் ஆண்டு 53 ஆயிரத்து 27 மில்லியன் ரூபா இலாபத்தையும், 2017 ஆம் ஆண்டு 10 ஆயிரத்து 55 மில்லியன் ரூபா இலாபத்தையும், 2018 ஆம் ஆண்டு 6 ஆயிரத்து 162 மில்லியன் ரூபா நஷ்டத்தையும், 2019 ஆம் ஆண்டு 11 ஆயிரத்து 853 மில்லியன் ரூபா நஷ்டத்தையும், 2020 ஆம் ஆண்டு 2ஆயிரத்து 356 மில்லியன் ரூபா இலாபத்தையும், 2021 ஆம் ஆண்டு 81 ஆயிரத்து 816 மில்லியன் ரூபா நஷ்டத்தையும், 2022 ஆம் ஆண்டு 61 ஆயிரத்து 553 மில்லியன் ரூபா நஷ்டத்தையும், 2023 ஆம் ஆண்டு நிறைவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் 69 ஆயிரம் மில்லியன் ரூபா இலாபத்தையும் கூட்டுத்தாபனம் அடைந்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்காக கூட்டுத்தாபனத்தின் சேவையாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் ஏதும் வழங்கப்படவில்லை. மாறாக 4.2 சதவீத வட்டி என்ற அடிப்படையில் புத்தாண்டு கொடுப்பனவுகள் வழங்கப் பட்டுள்ளன.

பெற்றோலிய விநியோகத்தை நெருக்கடிக்கு உள்ளாக்க ஒரு தரப்பினர் ஆரம்பத்தில் இருந்து முறையற்ற வகையில் செயற்படுகிறார்கள். இவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.– என்றார்.

# கல்முனை மாநகர நிதி மோசடி: கைதான இருவருக்கும் மறியல்!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதிவரை அவர்களை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று புதன்கிழமை (09) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஆஜர்படுத்தப்பட்ட இரு சந்தேக நபர்களையும் 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் தற்போது விசாரணைகளை பொறுப்பேற்றுள்ள குற்றப் புலனாய்வு பிரிவினர் கடந்த 7 ஆம் திகதி சாய்ந்தமருது பகுதியில் வைத்து கல்முனை மாநகர சபையில் கடந்த காலங்களில் தற்காலிக சிற்றுழியர்களாக கடமையாற்றிய இரு சந்தேக நபர்களை கைது செய்திருந்தனர்.

# 13 குறித்த ஜனாதிபதியின் பிரேரணைகள் மீண்டும் இன மோதலுக்கு வழிவகுக்கும்

## எச்சரிக்கிறார் அதுரெலியே ரத்ன தேரர்

13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான ஜனாதிபதியின் பிரேரணைகள் நாட்டில் மீண்டும் இனவாத மோதல்களுக்கான வழியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. அதற்கு நாங்கள் விருப்பவில்லை. அதனால் சிங்கள, தமிழ் மக்கள் இணைந்து தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேலைத் திட்டம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும் .

இவ்வாறு எதிர்க்கட்சியின் சுயாதீன அணியை சேர்ந்த அதுரெலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை (9) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆற்றிய விசேட உரை தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

ஜனாதிபதி இந்த சபையில் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் சுயநினைவுடன் பதிலளிப்பர் என்றே நினைக்கின்றேன். அந்தக் கட்சியினரின் கருத்துக்களுடனே நாங்கள் இருந்தோம். நாங்கள் கோத்தாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வர செயற்பட்டவர்கள். தற்போது ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருக்கும் விடயங்களின் பாரதூர நிலைமையை சபையில் உள்ளவர்கள் புரிந்துகொண்டுள்ளார்களா என்று தெரியவில்லை.

நாட்டில் பொதுப் பிரச்சினைகள் உள்ளன. நிதி, கலாசார பிரச்சினைகள் உள்ளன. இவற்றை தீர்ப்பதற்கான இன விவகாரத்தை எடுக்க வேண்டாம். வடக்குக்கான அதிகாரம், தெற்குக்கான அதிகாரம், கிழக்குக்கான அதிகாரம், முஸ்லிம்களுக்கு அதிகாரம் அல்ல. மில்லியன் கணக்கில் முதலீடுகளை மாகாண சபைகளுக்கு கொண்டு வர முடியும் என்று கூறுகின்றார்.

இதன் ஆபத்துக்களை இந்த சபை சிந்திக்க வேண்டும். ஏதேனும் மாகாணததுக்கென அவ்வாறு முதலீட்டை கொண்டு வர முடியாது. சீனாவை உதாரணமாக கூறியுள்ளீர்கள். அது தனி கட்சி நாடு. அங்குள்ள நிலைமை வேறு. அதனை இங்கே ஒப்பிட முடியாது.

இப்போது மீண்டும் மக்கள் அலை ஏற்பட்டு, மோதல் நிலைமைகளுக்கு நாட்டை கொண்டு செல்ல முடியாது. மாகாண சபை முறைக்கு இப்போதும் நாங்கள் எதிர்ப்பு. ஆனால் மாகாண சபை முறைமையை நீக்குமாறு கோரவில்லை. அருகிலுள்ள இந்தியாவை கோபித்துக்கொண்டு மீண்டும் மோதல்களுக்கு செல்வதற்கு நாங்கள் விரும்பவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய சூழ்நிலை



50 வீதம் உள்ளது. மிகுதி 50 வீதத்தை நாடு முழுவதும் நிலவும் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு கண்டாலே தீர்க்க முடியும். இதனால் இந்த பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காண வேண்டும். அனைத்து இனத்தவர்களும் இணைந்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம்.

வடக்குக்கு அதிகாரங்களை வழங்குவதன் மூலம் பிரச்சினைகள் தீர்ந்துவிட போகின்றதா? 13 ஆவது திருத்தத்தை வழங்கியதும் யுத்தம் முடிந்துவிடும் என்று நினைத்தனர். ஆனால் யுத்தம் நடைபெற்றது. நாங்கள் மீண்டும் இனவாத போராட்டத்துக்குச் செல்லத் தயாராக இல்லை. இதனால் நாட்டு மக்களின் கோபத்தை உண்டாக்க வேண்டாம். நீங்கள் செய்யும் இந்த செயற்பாடு மீண்டும் இனவாத மோதல்களுக்கான பாதையையே ஏற்படுத்தும். இதற்கு நாங்கள் விருப்பமில்லை.

சிங்கள, தமிழ் மக்கள் இணைந்து தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண வேலைத்திட்டம் ஒன்றைக் கொண்டுவாருங்கள். அதற்காக நாங்கள் வருவோம். முதலில் ஜனநாயகத்துக்காக தேர்தலை நடத்துங்கள்– என்றார்.

# யானைக்குச் சிகிச்சை வழங்க வெளிநாட்டு வைத்தியர் குழு

திரப்பனை லபுனொறுவ காப்பகத்தில் உள்ள யானை ஒன்றுக்கு சிகிச்சை அளிப்பதற்காக வெளிநாட்டு வைத்திய நிபுணர்கள் குழுவொன்று நாட்டுக்கு வரவுள்ளது என்று அநுராதபுரம் வனவிலங்கு வலய அலுவலகம் தெரிவித்துள்ளது.

சுமார் 10 அடி உயரம் கொண்ட சுமார் 40 வயதான இந்த யானை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி முன் இடது காலில் பலத்த காயமடைந்த நிலையில் உள்ளது.

இந்த யானைக்குச் சுமார் மூன்று மாதங்களாக கால்நடை வைத்தியர்களால் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் இதுவரை காயம் குணமாகவில்லை என்று கால்நடை வைத்தியர் சந்தன ஜயசிங்க தெரிவித்தார்.

எனவே, யானைக்கு மேலதிக சிகிச்சை அளிப்பதற்காக வெளிநாட்டு நிபுணத்துவத்தைப் பெற்ற வைத்தியர்களை வரவழைக்க வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் தீர்மானித்துள்ளது என்றும் கூறினார்

# மட்டக்களப்பு செயலக தொழில் சந்தை!

(பழுவூரான்)

நாட்டின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு, தொழிற்படையின் ஆர்வம், திறன்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவுமிக்க மனித வளத்தை வலுவூட்டும் அடிப்படையில் உலகளாவிய மட்டத்திலான தொழிற் படையை இலங்கையில் உருவாக்கும் நோக்கில் மட்டக்களப்பில் தொழில் சந்தை ஒன்று ஏற்பாடு வெய்யப்பட்டுள்ளது.

மகாஜனாக் கல்லூரி பிரதான மண்டபத்தில் மாவட்ட செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜாவின் வழி காட்டலில் இந்தத் தொழில் சந்தை இடம்பெறவுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் மற்றும் மாவட்ட செயலக தொழில் நிலையம் என்பன இணைந்து எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இதனை ஏற்பாடு செய்துள்ளன.

இத்தொழிற்சந்தையில் 30 இற்கும் மேற்பட்ட தனியார் துறை உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தொழில் கல்வி நிறுவனங்கள் கலந்துகொள்ளவுள்ள.

இதன்போது இனங்காணப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில் வாய்ப்புக்களுடன் தனியார் நிறுவனங்கள் இணைந்து கொள்ளவுள்ளன. தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள விரும்பும் தொழில் தேடுனர்கள் உரிய தினத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டு தங்களுக்குரிய தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

# வீடமைப்பு அதிகார சபையின் கடன் வசூலில் மோசடியான நிலைமை தணிந்து வருகிறது

## வீடமைப்பு அதிகாரசபையின் பொது முகாமையாளர் ஜானக தெரிவிப்பு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கடனை மீளப்பெறுதலில் இடம்பெற்ற மோசடியான நிலைமையைத் தணித்து வருகிறோம். இது தொடர்பாக களத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். இந்த விசாரணைகளின் அடிப்படையில் கடன் மீளப்பெறுதலில் மோசடி செய்தவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு நேரடியாக சட்டம் அமுல் படுத்தப்பட்டது.

அடுத்த சில மாதங்களில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கடன் மீளப் பெறும் இலக்கானது 400 மில்லியன் ரூபாவைத் தாண்டும் என அதிகார சபையின் பொது முகாமையாளர் கே.ஏ. ஜானக நம்பிக்கையை வெளிப் படுத்தியுள்ளார்.

அதற்கான முறையான வேலைத் திட்டத்தை அதிகாரசபை ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் கடன் மீளப்பெறுதலில் மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, தற்போது மாதாந்த இலக்கான 300 மில்லியன் கடன் வசூலைத் தாண்டியுள்ளது என்றும் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் கடன் மீளப்பெறுதலில் கீழே இருந்தோம். அதாவது ஒரு மாதத்தில் 154 மில்லியன் வசூலிக்க முடிந்தது.

தற்போதைய வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினின் வருகையின் பின்னர், அவரது ஆலோசனை மற்றும் தலைவரின் வழிகாட்டலின் கீழ் விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம்.

அதன்படி, எங்கள் மாவட்ட பொது முகாமையாளர்கள் அவ்வப்போது கூடி, ஆலோசனைகள் வழங்கி, வாரந்தோறும் அவர்களிடம் அறிக்கை பெற்று தொடர்ந்து கண்காணிப்பு செய்யப்பட்டது.

இதன் விளைவாக, மாதாந்திர கடன் மீளப்பெறும் இலக்கு 276 மில்லியனாக அதிகரித்துள்ளது. பின்னர் அது 280 மில்லியனாக உயர்த்தப்பட்டது. அடுத்து 300 மில்லியனை எட்டினோம். இப்போது 400 மில்லியன் இலக்கு கொடுத்துள்ளோம்.

தற்போது, ஒட்டுமொத்தமாக 300 மில்லியன் ரூபாவைக் கடந்துள்ளோம். கடந்த மாதம் 314 மில்லியன் ரூபா இலக்கை எட்ட முடிந்துள்ளது.

அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் தொடர் கண்காணிப்பு மற்றும் தலைவர் உள்ளிட்ட நிர்வாகக் குழுவின் கண்காணிப்புக் காரணமாக இதை எங்களால் சாதிக்க முடிந்தது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கடனை மீளப்பெறுதலில் இடம்பெற்ற மோசடியான நிலைமைகள் பற்றி அண்மையில் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள்.

தற்போது, நிலைமையைத் தணித்து வருகிறோம். இது தொடர்பாக களத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். இந்த விசாரணைகளின் அடிப்படையில் கடன் மீளப்பெறுதலில் மோசடி செய்தவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு நேரடியாக சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

அதன்படி, பலர் கைது செய்யப்பட்டனர். மோசடி செய்யப்பட்டது அரசின் பணம். இவர்கள் மீது, பொது நிதியை முறைகேடு செய்ததாகவும், போலி ஆவணங்கள் தயாரித்ததாகவும், உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை எடுக்கப்படும். அவர்கள் குறைந்தது ஒரு வருடமாவது விளக்கமறியலில் இருக்க வேண்டும்.

இப்போதும் களத்தில் சோதனை நடத்தி வருகிறோம். இதன் விளைவாக, கடன் மீளப் பெறுதல் முன்னேற்றத்தை 300 மில்லியன் இலக்குக்கு கொண்டு செல்ல முடிந்தது. கடன் மீளப்பெறுதல் நல்ல நிலையை எட்டியதால், மக்கள் தற்போது எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளன–என்று தெரிவித்தார்.

# 13 குறித்த ஜனாதிபதியின் யோசனையை எதிர்க்கிறது அரசின் கட்சியான பெரமுன!

## ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன என்கிறார் தயாசிறி ஜயசேகர எம்.பி.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்த ஜனாதிபதி யோசனை முன்வைக்கும் போது அரசின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறது. ஆகவே ஜனாதிபதியின் நிலைப்பாடு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு என்ன.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள், பொ–துஜன பெரமுனவின் கட்சி ஊடாக நாட–ாளுமன்றத்துக்குத் தெரிவாகி தற்போது எதிரணியில் செயற்படுபவர்கள் 13 ஆவது திருத்தம் தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். இது எனக்கு தொடர்பற்றது என்றார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை (09) இடம்பெற்ற அமர்வின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் குறித்து விசேட உரையாற்றினார்.

ஜனாதிபதியின் உரையை தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குறிப்பிடுகையில்–

பல பிரச்சினைகளுக்கான தீர்வை ஜனாதிபதி முன்வைத்துள்ளமை வரவேற்கத்தக்கது. ஏற்றுக் கொள்ள கூடிய விடயங்களுக்கு சுதந்திர கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி யோசனைகளை முன்வைத்துள்ள நிலையில் அரசின் பிரதான கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு மாற்றீடாக 13 ஆவது திருத்த விவகாரத்தில் ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை, மக்களாணை இல்லை என்கிறார்.

இது ஜனாதிபதியின் தனிப்பட்ட யோசனையா அல்லது அரசின் யோசனையா, ஜனாதிபதியின் யோசனைக்கு அரசின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு என்ன, அரசின் நிலைப்பாடு என்ன அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சிங்கள பிரதிநிதிகளின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்த 134 உறுப்பினர்களும் ஒருமித்த தீர்மானத்தை அறிவிக்க வேண்டும். அப்போது தான் ஜனாதிபதி முன்வைத்துள்ள யோசனை தொடர்பில் வினைத்திறனான சிறந்த நிலைப்பாட்டை எடுக்க முடியும்.– என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த ஆளும் கட்சிகளின்பிரதமகொறடாவானஅமைச்சர் பிரசன்ன ரணதுங்க–

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்திலான கட்சியின் கீழ் உள்ளோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒற்றையாட்சி நாட்டுக்குள் அதிகார பகிர்வு என்ற நிலைப்பாட்டுக்குள் இருந்து கொண்டு மாகாண சபை தேர்தலை நடத்தி அதிகாரங்களை வழங்கினார்.

ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும் சர்வகட்சி மாநாட்டின் போது எமது நிலைப்பாட்டை குறிப்பிடுகிறோம் என்றார்.



நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர முன்வைத்த விடயங்களுக்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க–

13 ஆவது திருத்தம் தொடர்பில் புதன்கிழமை (09) குறிப்பிட்ட விடயங்களை நான் அமைச்சரவையில் குறிப்பிட்டுள்ளேன்.

ராஜபக்ஷர்களுக்கு அடிபணிந்து செயற்பட வேண்டாம் என்று குறிப்பிடுகிறார்கள். ராஜபக்ஷர்களுக்கு அடிபணியாமல் செயற்படும் போது ராஜபக்ஷர்களுக்கு அடிபணிந்து செயற்படுவதாக குறிப்பிடுகிறார்கள். நான் எவ்வாறு செயற்படுகிறது என்று குறிப்பிடுங்கள்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களும், பொதுஜன பெரமுனவின் கட்சி சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவாக அந்த பக்கம் (எதிர்க்கட்சி) உள்ளவர்களும் மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம். ஆகவே நீங்கள் அவரை சந்தித்து கூட்டம் நடத்தி பேசுங்கள். எனக்கு வேலையில்லை என்றார்.

# இலங்கைக்கு இரண்டு பதக்கங்கள்




பொதுநலவாய இளையோர் விளையாட்டுப் போட்டியில் இலங்கையின் அயோமல் அகலங்க மற்றும் நிலுபுல் ஆகியோர் வெள்ளிப் பதக்கத்தையும் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

இவர்கள் ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டும் ஓட்டம் மற்றும் உயரம் பாய்தல் ஆகிய போட்டிகளிலேயே இந்த பதக்கங்களை வென்றுள்ளனர்.

இன்று (10) காலை நடைபெற்ற பொதுநலவாய இளையோர் விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டும் ஓட்டப் போட்டியின் இறுதிப்போட்டியில் அம்பகமுவ மத்திய மஹா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 17 வயதான அயோமல் அகலங்க கலந்து கொண்டார்.

இதில் ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டும் ஓட்டத்தில் அயோமல் அகலங்க வெள்ளிப் பதக்கம் வென்றார். போட்டியை முடிக்க அவர் எடுத்துக் கொண்ட நேரம் 51.61 வினாடிகள் ஆகும்.

400 மீற்றர் தடை தாண்டும் ஓட்டத்தில் ஜமைக்கா தங்கப் பதக்கத்தையும், இங்கிலாந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றன.

இதேவேளை, பொதுநலவாய இளையோர் விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் நிலுபுல் பெஹசர வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார். இந்த போட்டியில் நிலுபுல் 2.00 மீற்றர் உயரம் பாய்ந்துள்ளார்.

இந்த போட்டியில் கலந்து கொண்ட லெசந்து அர்தவிது 1.95 மீற்றர் உயரம் பாய்ந்து நான்காவது இடத்தைப் பெற்றார்.

உயரம் பாய்தல் போட்டியில் இங்கிலாந்து தங்கப் பதக்கத்தை வென்றது.

# நிறுவை அளவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரையிடல் ஆரம்பம்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் அளவீட்டு சேவைகளினதும் உபாயங்களினனும் பிரிவினரால் பல்வேறு தராசுகளை பரிசோதனை செய்து சரி பார்க்கும் நிகழ்வு இடம்பெற்று வருகிறது. நேற்று இது ஆரம்பிக்கப்பட்டது.

கல்முனை பிரதேச செயலகததுக்கு உட்பட்ட கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலவணை ஆகிய பிரதேச வியாபாரிகளின் நிறுவை – அளவை உபகரணங்கள் இதன்போது சரிபார்க்கப்படவுள்ளன.

நான்கு நாள்கள் இச்செயற்பாடுகள் காலை 9.30-3.30மணி வரை செயலக வளாகத்தில் மேற்கொள்ள முடியும் என பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி அறிவித்துள்ளார்.

எனவே வர்த்தகர்கள், மீனவர்கள் தங்களுடைய வியாபார அளவை நிறுவை உபகரணங்களைக் கொண்டு சென்று முத்திரையிட்டுக் கொள்ளுமாறு கல்முனை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இதன் போது இலத்திரனியல் தராசுகள், பாரம்பரிய தராசுகள், நிறுக்கும் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு அளவீட்டுடன் கூடிய தராசுகள் சரி பார்க்கப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தராசுகளை பரிசோதனை செய்து சரி பார்க்கும் சான்றிதழ் இன்றி பல வியாபாரிகள் மோசடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவது தொடர்பிலும் மக்களால் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# யானையின் அட்டகாசம்; நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகரசபை பிரிவுக்குட்பட்ட நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, மருதமுனை பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புகளுள் ஊடுருவிய காட்டு யானைகள் வீடுகளுக்குள் புகுந்து சுற்றுமதில் மற்றும் பயனுள்ள வாழை மரங்களை துவம்சம் செய்துள்ளன.

அண்மைக் காலமாக இந்தப் பகுதிகளில் காட்டுயானைகள் அட்டகாசம் அதிகரித்து வருகிறது. அத்துடன் இங்குள்ள கரவாகுப்பற்று கல்முனைக் கண்டத்தில் நுழையும் காட்டு யானைகள் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கிராமங்களுக்குள் உட்புகுந்து தொடர்ந்தும் மக்களை அச்சுறுத்தி வருகின்றன.

இப் பிரதேசத்தில் கடந்த ஒரு வாரகாலமாக என்றுமில்லாத வகையில் மருதமுனை பகுதியில் தனியன் காட்டுயானை ஒன்று அட்டகாசத்தில் ஈடுபட்டு வருகிறது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஊருக்குள் யானை நுழைந்ததை அறிந்து கொண்ட மக்கள் அதனை விரட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். சமீப காலமாக காட்டு யானைகள் சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை ,பாண்டிருப்பு ,மருதமுனை, கிராமததுக்குள் நுழைந்து அட்டகாசம் செய்து வருவதால் இரவு வேளையில் மக்கள் நித்திரையின்றி விழித்திருக்கின்றனர் . அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மத்திய அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு போராட்டம்!

## - இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு



காவிரி நீரை பெற்றுக் கொடுக்குமாறு வலியுறுத்தி, எதிர்வரும் 12 ஆம் திகதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, அரியலூர், கடலூர் மற்றும் புதுக் கோட்டை ஆகிய டெல்டா மாவட்டங்களில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்படும் என இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக திருவாரூரில் உள்ள இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் அந்த கட்சியின் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் ஊடகவிய லாளர் சந்திப்பொன்றை நடத்தினர்.

இதன்போது அவர்கள் குறிப்பிடு கையில், திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் லட்சக்கணக்கான ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது காவிரியில் இருந்து நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் முறையாக கிடைக்காததால், நெற்பயிர்கள் கருகி வருகின்றன.

எனவே, தமிழகத்துக்கு ஜுன், ஜுலை, ஓகஸ்ட் மாதங்களில் காவிரியில் இருந்து கிடைக்க வேண்டிய தண்ணீரை கர்நாடக அரசிடம் இருந்து உடனடியாக மத்திய அரசு பெற்றுக்கொடுக்க வேண்டும். தண்ணீர் இன்றி கருகிய நெல் பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும்.

குறுவை நெற்பயிர்களுக்கு உடனடி யாக பயிர்க் காப்பீடு திட்டத்தை அமல் படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக் கைகளை வலியுறுத்தி நாளை மறுதினம் திருவாரூர் தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களை முற்றுகையிட உள்ளோம் என்று தெரிவித்தனர்.

## கொலை செய்ய சதித் திட்டம்: சந்திரபாபு நாயுடு குற்றச்சாட்டு!



தன்னை கொலை செய்ய சதித் திட்டம் இடம்பெறுகிறது என்று தெலுங்கு தேசம் கட்சித் தலைவரும், ஆந்திர மாநிலத்தின் முன்னாள் முதல்வருமான சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலத்தின் முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று விஜயநகரத்தில் செய்தியாளர் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார், இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னை கொல்ல பல முறை முயற்சி நடந்துள்ளது. ஆனால், என் மீதே பொலிஸார் வழக்கு பதிவு செய்திருப்பது வேடிக்கையாக உள்ளது. எனது பாதுகாவலர்கள், ஊடகங்கள் மற்றும் பொதுமக்களே இதற்கு சாட்சி. என் மீதான கொலை முயற்சிகளை நான் அறிவேன். எனவே இதுகுறித்து புலனாய்வு பிரிவால் விசாரணை நடத்துவது அவசியம்.

நான் மக்களிடையே செல்ல கூடாது என்பதற்காகவே என் மீது பொலிஸார் பொய் வழக்கு பதிவு செய்துள்ளனர். என் மீது கல்வீசி தாக்குதல் நடந்தாலும், வெறும் பார்வையாளர்களாகவே பொலி ஸார் உள்ளனர் என்று தெரிவித் துள்ளார்.

## ‘மோடிக்கு நேரம் இல்லை’



மணிப்பூர் கலவரம் வெடித்து 100 நாட்கள் கடந்த பின்னரும்கூட பிரதமர் நரேந்திர மோடிக்கு அங்கு செல்ல நேரம் கிடைக்காதது வருந்தத்தக்கது என்று முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

ப.சிதம்பரம் தனது ருவிட்டர் பதிவில் இதனை குறிப்பிட்டுள்ளார். அந்த பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இன அழிப்பு வெட்கக்கேடானது என்று அமைச்சர் அமித் ஷா ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் அதைவிட வெட்கக்கேடானது அதைவைத்து அரசியல் செய்வது என்று கூறியுள்ளார். அதனை நான் ஏற்கவில்லை. அது தவறான கருத்து. இன அழிப்பு பற்றிய விவரங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதும், அதைப் பற்றி விவாதிப்பதும் ஒவ்வொரு இந்தியரின் கடமையாகும்.

உண்மையான வேதனை எதுவென் றால் மணிப்பூரில் கலவரம் வெடித்து 100 நாட்கள் கடந்தும்கூட பிரதமருக்கு மணிப்பூர் செல்ல நேரம் இல்லாமல் இருப்பதே என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி வேட்பாளர் சுட்டுக்கொலை!

## ஈக்குவடோரில் பரபரப்பு



ஈக்குவடோர் நாட்டின் ஜனாதிபதி வேட்பாளரொருவர், தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஈக்குவடோர் நாடாளுமன்ற உறுப்பினரான பெர்ணான்டோ விலாவிசென்ஸியோ, பிரசாரக் கூட்டம் நடைபெற்ற இடத்தை விட்டு வெளியேறுகையில் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

காரில் ஏறுகின்ற போது 59 வயதான விலாவிசென்ஸியோவின் தலையில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என அவரது பிரசாரக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இந்தக் குற்றச்செயலுக்கு தண்டனை வழங்கப்படும் என ஈக்குவடோர் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# ஜோபைடனுக்கு அச்சுறுத்தல்: சந்தேக நபர் சுட்டுக்கொலை!





அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் அதிகாரிகள் சிலருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த நபர், அமெரிக்க புலனாய்வு பிரிவான எப்.பி.ஐயினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேநபர், தமது சமூக வலைத்தளங்களின் ஊடாக, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாக தொடர்ந்தும் பதிவேற்றி வந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு தாம் பயன்படுத்தவுள்ள ஆயுதங்கள் குறித்தும் சந்தேகநபர் தகவல் வெளியிட்டிருந்தார் என கூறப்படுகின்றது.

இதனையடுத்து, அவர் தொடர்பான விசாரணைகளை அமெரிக்க புலனாய்வு பிரிவு ஆரம்பித்திருந்தநிலையில், உட்டா நகரில் உள்ள அவரது வீட்டிற்கு சென்றுள்ளனர்.

இதன்போது, அமெரிக்க புலனாய்வு பிரிவின் அதிகாரிகளால் சந்தேகநபர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# ஹவாயில் காட்டுத்தீயில் சிக்குண்டு 36 பேர் பலி!



ஹவாயில் உள்ள மவுய் மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயில் சிக்குண்டு 36 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த பகுதியில் வீசும் பலத்த காற்றினால் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் அறிவித்துள்ளன.

அத்துடன், மவுய் மாகாணத்தில் இருந்து இதுவரை ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

# 5 நகரங்களை கைப்பற்றிய ரஷ்யா!



உக்ரைனின் கார்கிவ் பிராந்தியத்திற்கு உட்பட்ட 5 நகரங்களை கைப்பற்றியுள்ளதாக ரஷ்யா அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இதனை கார்கிவ் இராணுவ நிர்வாகத்தின் மாஸ்கோ தலைமையான விட்டலி கஞ்சேவ் ரஷ்ய தொலைக்காட்சியில் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய படைகள் கார்கில் பிராந்தியத்தில் 29 குடியேற்றங்களை கட்டுப்பாட்டில் வைத்துள்ளதுடன் உக்ரைனிய படைகள் கிளஸ்டர் குண்டுகளை இப்பகுதியில் தாக்குதலுக்கு பயன்படுத்துவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் இந்த தாக்குதலால் தங்களுடைய வீரர்களால் 17 குடியேற்றங்களில் இருந்து மட்டுமே செயல்பட முடிவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் உக்ரைன் ஆயுதப்படை இன்று கார்கிவ்-வின் 10 நகரங்கள் கடுமையான ஏவுகணை அல்லது வான் தாக்குதலுக்கு உள்ளானதாக ஒப்புக்கொண்டுள்ளது.

இருப்பினும், ரஷ்யா அறிவித்துள்ள 5 நகரங்களின் கைப்பற்றல் குறித்து எத்தகைய அங்கீகாரமும் உக்ரைன் தரப்பில் இருந்து தெரிவிக்கப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.